

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 18.04.2025 | திருப்பூர் வடக்கு | பல்லடம் | அண்ணா திடல், பொங்கலூர் | எழுத்தாளர் வே.மதிமாறன், கி.ரேஷ்மா |
| 2 | 19.04.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | வெங்கமேடு, 9–வது வட்டம் | இரா.ராஜீவ் காந்தி, அ.நஸ்ரின் பானு |
| 3 | 19.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில் | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 4 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 5 | 19.04.2025 | திருச்சி வடக்கு | முசிறி | கைகாட்டி, பரிசில் துறை ரோடு | செந்தில்வேல், ம.சையது முஷரப் |
| 6 | 20.04.2025 | தருமபுரி கிழக்கு | பென்னாகரம் | பேருந்து நிலையம் அருகில் | பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், செ.யோகஸ்ரீ |
| 7 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 8 | 22.04.2025 | சேலம் கிழக்கு | கெங்கவல்லி | பேரூராட்சி அலுவலகம் அருகில், கெங்கவல்லி | திண்டுக்கல் ஐ.லியோனி, செ.முத்துகுமார் |
| 9 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | நாஞ்சில் சம்பத், க.செல்வமணி |
| 10 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |
| 11 | 27.04.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, சி.கா.சுகன் மந்த்ரன் |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 15–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



# கண்ணீர் அஞ்சலி

மதுரை மாவட்ட திமுக முன்னாள் அவைத்தலைவர்
**ஆர்.கோபால்சாமி** அவர்களுடைய மனைவியும்
மதுரை மாநகர் மாவட்ட திமுக செயலாளர்
**கோ.தளபதி** MLA அவர்களின் தாயாருமான

## கோ.மாரியம்மாள்

அவர்கள்...

வயது (92) முதிர்வு காரணமாக இயற்கை எய்தினார். அவர்களது இறுதி ஊர்வலம் 17.4.2025 வியாழன் அன்று மாலை 5 மணியளவில் திருப்பரங்குன்றம் மேலரதவீதி எங்களது இல்லத்தில் இருந்து நடைபெற்றது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்...

இவண்
**கோ.தளபதி MLA**
மதுரை மாநகர் மாவட்ட திமுக செயலாளர்
மற்றும் **குடும்பத்தினர்கள்**